# அல் அஸ்ஹர் கல்லூரி – ஹெம்மாதகம

## க.பொ.த உயர் தர தவணைப் பரீட்சை 2021

## தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் I

புள்ளி

சுட்டெண்:.................................

நேரம்: 3 மணித்தியாலம்

**1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1),(2),(3),(4),(5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.**

1) மானுடத் தொடர்புகளை உருவாக்கும், கொண்டு செல்லும் மற்றும் அதனை விருத்தி செய்யும் கருவி தொடர்பாடலாகும் எனக் குறிப்பிடுபவர்
   1. வோல்ட்டர் லிப்மன்
   2. சார்ள்ஸ் ஹோர்ட்டன் கூலி
   3. ஹரோல்டி லாஸ்வெல்
   4. பேராசியரியர் வில்வர் ஷ்ராம்
   5. ஜோன் டூவி

2) தொழில்சார் தொடர்பாடுநர்கள் இயந்திர ஊடகங்களின் துணையோடு பரந்த அளவிலும் உடனடியாகவும் தொடர்ச்சியாகவும் விசாலமான பல்வேறு விதமான பெறுநர் கூட்டத்திற்குத் தகவல் அனுப்பி யாதேனும் தாக்கத்தினை ஏற்படுத்தும் செயற்பாடு வெகுசனத் தொடர்பாடல் என வரையறை செய்த அறிஞர்கள்
   1. ஹாய்பர்ட், அன்குராய்ட்
   2. டெவுளர், டெனிஸ்
   3. டெவுளர், ஹய்பர்ட்
   4. டெவுளர், அன்குராய்ட்
   5. போன், ஹாய்பர்ட்

3) தொடர்பாடல் செயலொழுங்கில் குறிமுறையாக்கம் குறிமுறையவிழ்ப்பு தொடர்பாக முதன் முதலில் கருத்தியலை உருவாக்கிய அறிஞர்கள்.
   1. சாள்ஸ் ஒஸ்கூட் மற்றம் வில்பர்ஷ்ராம்
   2. ஹரோல் டி. லாஸ்வெல்
   3. குளோட் ஷெனேன் மற்றும் வொரன் வீவர்
   4. அரிஸ்ரோட்டில்
   5. போல் லசார் பீல்ட்

4) தொடர்பாடல் செயன்முறை தொடர்ந்தியங்குவதற்கு தேவைப்படுவது
   1. பெறுநர்
   2. தாக்கம
   3. அனுப்புநர்
   4. செய்தி
   5. வழிமுறை

5) ஊடகக் கற்கைகளில் மதிநுட்பம் என்பதன் சரியான கருத்து.
   1. ஊடகங்கள் வாயிலாக எல்லையற்று வெளிவரும் தகவல்களை அறிந்து கொள்ளுதல்.
   2. தொடர்பாடல் மாதிரிகள் மற்றும் அதன் வரைவிலக்கணங்களை அறிந்து கொள்ளுதல்
   3. விரைவாகவும்,உடனுக்குடனும் தகவலை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது தொடர்பில் அறிந்து கொள்ளுதல்.
   4. ஊடகங்கள் வழியே வெளியாகும் தகவல்களை வடிகட்டி, தேவையான தகவல்களை மட்டும் பெற்றுக் கொள்வது பற்றி அறிந்து கொள்ளுதல்.
   5. பெறுநர்களது விருப்பு வெறுப்புக்களை எவ்வாறு விளங்கிக் கொள்வது என்பது தொடர்பில் கற்றல்.

6) வானொலி செய்தி ஒலிபரப்பில் பயன்படுத்தப்படும் மொழியின் ஒரு பலவீனமாகக் கருதக்கூடியது
   1. தெளிவு
   2. சுருக்கம்
   3. வஞ்சப் புகழ்ச்சி
   4. படைப்பாக்கம்
   5. எளிமை

7) தொலைக்காட்சி ஊடகம் சிறுவர்களிடையே ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பிலான ஆய்வினை மேற்கொண்டவர்.
1. பேராசிரியர் வில்பர் ஷ்ராம்
2. பேராசியரியர் காசித் தம்பி
3. பேராசிரியர் விமல் திசாநாயக்க
4. ஓஸ்குட்
5. குளோட் சனான் மற்றும் வீவர்

8) தொடர்பாடுநர் தகவலை வழங்கிய பின் அதனைப் பெறுபவர் அது தொடர்பாக அவதானிக்க கூடியவாறான ஒரு எதிர்வினையை வெளிப்படுத்தி கொள்ளும் செயன்முறையை அடையாளப்படுத்துவது.
1. உச்சஸ்தானம்
2. சந்தர்ப்பம்
3. இரைச்சல் / இடையூறு
4. பின்னூட்டல்
5. தாக்கம் / விளைவு

9) பின்வருவனவற்றுள் செய்தி ஒன்றில் பிரதான இயல்பாகக் காணப்பட வேண்டியது.
1. பிரதம ஆசிரியரது கவனத்தை ஈர்க்க கூடியதாக இருத்தல் வேண்டும்
2. வன்முறைகளுடன் தொடர்பு பட்டிருத்தல் வேண்டும்.
3. அறிக்கையிடும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படல் வேண்டும்.
4. சமூகத்தில் குறிப்பிட்ட பிரிவினரின் கவனத்தை ஈர்ப்பதாக இருத்தல் வேண்டும்.
5. அரசியல் சார்ந்த பண்புகள் அதிகம் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

10) கொரோனா தொடர்பாக நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலும் உள்ள மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தொலைக்காட்சியில் வைத்தியர் நடாத்தினார். இங்கு இடம்பெற்றிருக்கக் கூடியது
1. ஆளுள் தொடர்பாடலாகும்
2. ஆளிடைத்தொடர்பாடலாகும்
3. குழுத்தொடர்பாடல ஆகும்
4. வெகுசனத்தொடர்பாடல் ஆகும்
5. பூகோளத் தொடர்பாடல் ஆகும்

11) சுய எண்ணிக்கை, சுயமதிப்பு, சுய பிரதிமை (Self Image) ஆகியன மிக நெருக்கமாயிருப்பது.
1. ஆட்களிடைத் தொடர்பாடலுடனாகும்
2. ஆளுள் தொடர்பாடலுடனாகும்
3. வாய் மொழியல்லாத தொடர்பாடலுடனாகும்
4. தூண்டல் தூண்டற்பேறு கோட்பாட்டுடனாகும்
5. இருபடிநிலை எண்ணக்கருவுடனாகும்

12) பின்வரும் அம்சங்களுள் தொடர்பாடல் செயன்முறை ஒன்றில் அடிப்படை அம்சமாக காணப்படாதது.
1. தொடர்பாடுநர்
2. தகவல்
3. பெறுநர்
4. ஊடகம்
5. வாயிற்காப்பு

13) தொடர்பாடல் வகைப்பிரிப்புக்கள் பாகுபடுத்தப்படுவதில் பங்குபெறுவது
1. தொடர்பாடல் நடத்தை
2. தொடர்பாடல் வளர்ச்சி
3. பங்குபெறுநர்களின் எண்ணிக்கை
4. தகவல் மூலம்
5. தொடர்பாடல் தாக்கம்

14) தொடர்பாடல் ஓர் குறியீட்டுப் பாவனையுடையது என்பது தொடர்புபடாத கூற்று
1. தொடர்பாடல் என்பது ஓர் குறியீட்டுச் செயன்முறையாகும்
2. தகவல் உருவாகுவது குறியீடுகள் மூலமாகும்
3. சொல், சமிக்ஞைகள், எழுத்துக்கள் என்பன குறியீட்டுடன் தொடர்புபட்டவை.
4. ஒலி சமிக்ஞைகள் குறியீடுகள் அல்ல என்பது உண்மை
5. சிக்கலான உணர்வுகள், கருத்துக்கள் என்பன குறியீடுகள் வாயிலாக வெளிப்படுத்த முடியும்என்பது உண்மை.

15) வெகுசன தொடர்பாடல் ஏனைய தொடர்பாடல் வகைகளிலிருந்து வேறுபடுதற்காண காரணமாக கருதக்கூடியது
1. தொழில்சார் தன்மைகொண்டது

2. ஒரே பண்பினரான பெறுநர்களைக்கொண்டது
3. தொடர்ச்சித்தன்மையற்றிருத்தல்
4. தொடர்பாடுபவருக்கும் பெறுநருக்கும் இடையிலான நெருக்கம் காணப்படல்
5. செயற்படுதிறன்மிக்க பின்னூட்டம் காணப்படுதல்

16) மானுட அறிவின் தோற்றம் பற்றிய தேடலில் பயன்படுத்தப்படும் நுட்பமுறை
1. ஆழ்பரிவு
2. தொகுப்பு
3. சமூகமயமாதல்
4. மையப்படுத்துதல்
5. ஒரே பண்பினராக்குதல்

17) நாளாந்த அடிப்படையில் மக்கள் பொதுவாக பயன்படுத்தும் தொடர்பாடல் வடிவம்
1. காட்சித் தொடர்பாடல்
2. வாய்மொழித் தொடர்பாடல்
3. வாய்மொழி சாராத் தொடர்பாடல்
4. செவிப்புலத் தொடர்பாடல்
5. முறைசாராத் தொர்பாடல்

18) இலங்கையில் தமிழில் ஊடககற்கை துறைசார்ந்த பட்டப்படிப்புக்களினை வழங்கும் பல்கலைக்கழகம்
1. கொழும்புப் பல்கலைக்கழகம்
2. கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகம்
3. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
4. கொழும்பு பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகம்
5. தெஹிவளை கனிஸ்ட பல்கலைக்கழகம்

19) அன்றாட வாழ்விற்குத் தேவையான தகவல்கள் அடங்கிய குறிக்கபப்பட்ட காலப்பகுதியில் தொடரந்து வெளிவரும் ஒனறிணைந்து கட்டபப்ட்ட வெளியடீ என யுனஸ்கோ வரையறை செய்யும் வெகுசன ஊடகம்.
1. பத்திரிகை
2. சஞ்சிகை
3. புத்தகம்
4. வானொலி
5. துண்டுப்பிரசுரம்

20) பின்வருவனவற்றுள் தொடர்பாடல் வகைக்குள் உள்ளடங்கப்படாதவை.
1. தனியாள் தொடர்பாடல்
2. பொதுசன தொடர்பாடல் (Public Communication)
3. எழுத்துத் தொடர்பாடல்
4. வெகுசனத் தொடர்பாடல் (Mass Communication)
5. மெய்நிகர்த் தொடர்பாடல்

21) கரப்பந்து விளையாடிக்கொண்டிருந்த நண்பர்களுள் ஒருவன் திடீரென மயக்கமுற்று விழவே உடன் அவனுக்கு முதலுதவி அளித்த நண்பன் தான் வாசித்த புத்தகங்கள் முதலுதவி பற்றி தான் அவதானித்த விடயங்கள் ஆகியன இதற்கு உதவின எனக் கூறினான். இவ்விடயம் அடங்கிய தொடர்பாடல் மூலக்கூறாவது
1. பின்னூட்டம் ஆகும்
2. குறிமுறையாக்கம் ஆகும்
3. அனுபவக்களம் ஆகும்
4. குறிமுறையவிழ்ப்பு ஆகும்
5. தகவல் பெறுகை ஆகும்

22) சுற்றாடலில் உள்ள பல்வேறு உயிருள்ள, உயிரற்ற ஒலிகளை ஒன்றிலிருந்து ஒன்று வேறுபிரித்து இனங்காண இயலுமாயிருப்பது
1. சூழலை அறிந்துகொள்ள உதவும்
2. முறைசாராத் தொடர்பாடலை ஊக்குவிக்க காரணமாக அமையும்
3. செவிப்புலத் தொடர்பாடல் திறன் விருத்திக்கு காரணமாக அமையும்
4. செவிப்புலச் செயற்பாட்டை இனங்காண உதவுதாக அமையும்
5. விலங்குகளின் சத்தத்தைப் போலச்செய்வதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கும்

23) தொலைபேசித் தொடர்பாடல் ஒன்றின்போது இருதரப்பினராலும் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் பயன்படுத்தக்கூடிய வாய்மொழியற்ற தொடர்பாடல் முறைகள் அடங்கிய தொகுதி
1. பேச்சின் வேகம், மௌனம், நாற்றம், ரிதம்
2. மௌனம், சாடைக்குறிப்பு, ரிதம், வெளி
3. மௌனம், பேச்சின் வேகம், ரிதம், குரல் மாதிரிகள்

4. பேச்சின் வேகம், தொனி, நாற்றம், ரிதம்
5. வெளி, தோற்றப்பாங்கு, குரல், ரிதம்

24) வெகுசன ஊடகங்களின் பெறுநர்கள்
1. செயற்படுநராயிருத்தல்
2. வேறுபட்ட பண்பினராயிருத்தல்
3. ஒருமித்திருப்பர்
4. ஒரேவகைப் பண்பினராயிருப்பர்
5. மாறாத்தன்மையினராய் இருப்பர்

25) அமெரிக்காவில் நடைபெற்ற வேலை நிறுத்தப்போராட்டங்களினை அடிப்படையாகக் கொண்டு உலகில் முதலாவது பொதுமக்கள் தொடர்பு அலுவலகத்தினை ஆரம்பித்துக் கொண்ட நபர்.
1. எட்வர்ட் எல். பெர்ணீஸ்
2. ஐவி லீ
3. ரோட் ஹன்ட்ஸ்
4. ஜேம்ஸ் குருனிக்
5. ஜீலியஸ்சீசர்

26) வெகுசன ஊடக நிறுவனங்கள் ஒரு சில விடயங்கள் தொடர்பில் அதிக அதிகாரத்தைப் பயன்படுத்தும். இது HUB மாதிரியில் குறிப்பிடப்படுவது
1. வடிகட்டி மூலமாகும்
2. பின்னூட்டல் மூலமாகும்
3. வாயிற்காப்பாளர் மூலமாகும்
4. ஊடக ஸ்தீரணம் மூலமாகும்
5. தாக்கம் மூலமாகும்

27) பின்வரும் ஊடகக்கருவிகளுள் பிரஜைகள் ஊடகப்பாவனையில் அதிகுறைந்த தகைத்திறன் கொண்டது
1. செல்லிடப்பேசி
2. மின்னஞ்சல்
3. வலைப்பூக்கள்
4. ஸ்கைப்
5. இணையத்தளங்கள்

28) தொடரப்பாடல் ஊடக கற்கை துறையில் மிக அண்மைய காலத்தில் கலைவடிவமாக அங்கீகரிக்கபப்ட்ட ஊடக வழிமுறை
1. தொலைக்காட்சி ஊடகம்
2. இணைய ஊடகம்
3. சினிமா ஊடகம்
4. சமூக ஊடகம்
5. வானொலி ஊடகம்

29) பின்வரும் கருத்தியல்களில் சமூகமயமாக்கம் எனும் எண்ணக்கருவுடன் தொடர்புபடாத கூற்று.
1. குழந்தை பிறந்தது முதல் நடைபெறும் ஒரு செயலெழுங்கு
2. குடும்பம் சமூகமயமாக்கலை ஏற்படுத்தும் உயிரியல் அமைப்பாகும்
3. சமூகமயமாக்கம் குறிப்பிட்ட வயதோடு மட்டுப்படுத்தப்படும் ஒன்றாகும்
4. சமூகமயமாக்கத்தினை ஏற்படுத்துவதில் வெகுசன ஊடகங்களும் பங்காற்றுகின்றன
5. சமூகமயமாக்கம் போலச்செய்தல் வகிபாகம் ஏற்றல் பின்பற்றுதல் வாயிலாகவும் நடைபெறும்

30) ஊடக கல்வியறிவு தொடர்பான திறமையாகக் கொள்வதற்கு பொருத்தப்பாடு குறைவானது.
1. ஊடக உள்ளடக்கத்தை கையாளும் அறிவு
2. ஊடக ஊள்ளடக்கத்தை உருவாக்கும் திறன்.
3. ஊடக உள்ளடக்கத்தை மதிப்பிடும் ஆற்றல்
4. ஊடக உள்ளடக்கத்தை ஆராயும் திறமை
5. ஊடா உள்ளடக்கத்தை நுகர்வதற்கான விருப்பம்

பின்வரும் மாதிரி உருவினை அடிப்படையாக கொண்டு 31 தொடக்கம் 35 வரையான வினாக் களுக்கு விடை தருக.



31) மேற்குறிப்பிட்ட அம்சங்களில் குறிமுறையாக்கம், குறிமுறையவிழ்ப்பு செயற்பாடு நடைபெறுமாயின் அதனை வெளிப்படுத்தி நிற்பது.
1. A மற்றும் B இல்
2. B மற்றும் C இல்
3. B மற்றும் D இல்
4. A மற்றும் D இல்
5. C மற்றும் E இல்

32) மேற்குறித்த மாதிரி உருவினை அடிப்படையாக கொண்டு குறிப்பிட்ட தகவல் தொடர்பாடப்படும் விடயத்தினை சுட்டிக்காட்டும் எழுத்து.
1. D ஆகும்
2. C ஆகும்
3. B ஆகும்
4. A ஆகும்
5. பெயரிடப்படாத பகுதி ஆகும்

33) மேற்குறித்த மாதிரி உருவானது தொலைபேசி பரிவர்த்தனயை அடிப்படையாக கொண்டு முன்வைக்கப்பட்ட போது தொடர்பியலாளனால் முன்வைக்கப்பட்ட தகவல் பெறுநரை சென்றடையவில்லை அதனை வெளிப்படுத்திக் காட்டுவது.
1. A
2. B
3. C
4. D
5. E

34) மேற்குறித்த மாதிரி உருவின் அடிப்படையில் அதன் இயல்புகளோடு தொடர்புபடாத அம்சம்.
1. ஒரு வழித்தொடர்பாடல் தன்மையை புலப்படுத்துவது
2. தொலைபேசித் தொடர்பாடல் தன்மையை அடிப்படையாகக் கொண்டது
3. பின்னூட்டல் செயன்முறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது
4. நேர்வழித்தன்மையை அடிப்படையாக கொண்டது
5. வட்டச்சுற்றுப் பாய்ச்சலுக்கு எதிரான தன்மையைக் கொண்டது

35) மேற்படி மாதிரியின் தன்மையினை அடிப்படையாக கொண்டு அதையொத்த மாதிரி உருவினை முன்வைத்தவர்கள் / முன்வைத்தவர்.
1. ஹரோல் டி. லாஸ்வெல்
2. குளோட் ஷனோன் மற்றும் வொரன்வீவர்
3. சாள்ஸ் ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம்
4. அரிஸ்ரோட்டில்
5. டேவிட். கே. பெர்லோ

36) குறித்தொரு சிந்தனையை மிகச்சுருக்கமாக எடுத்துச்சொல்லக்கூடிய வினைதிறன்மிக்க மூலம்
1. நாட்டார் கதைகள்
2. நாட்டார் பாடல்கள்
3. விடுகதைகள்
4. நாட்டார் கவிதைகள்
5. பலமொழிகள்

37) தற்போதைய உலகில் ஊடகங்களைக் கண்காணிப்பதற்கு மிகவும் வினைத்திறனுள்ள வழிமுறை.
1. ஒழுக்க நெறி கோட்பாடுகளாகும்
2. சட்ட வரையறை
3. ஊடகவழக்காறுகள்
4. மரபு
5. சந்தை

38) தவறான கூற்றை தெரிவுசெய்க
1. நண்பர்களின் பிரிவு காரணமாக சோர்வு உருவாகலாம்
2. உள அழுத்தம் ஆளுள் தொடர்பாடலின் இயல்புகளுள் ஒன்றாகும்
3. அதிகளவு உணவினை உற்கொள்ளும் பழக்கம் பதகளிப்பின் இயல்பாகும்
4. தமக்குரிய பணியின் இலக்குகளை பூரணப்படுத்தமுடியாதபோது பதற்றம் ஏற்படும்
5. தானும் மற்றவர்களும் சரியெனச் சிந்திப்பது துருவமயப்படுத்தல் எனப்படும்

39) பின்வரும் கூற்றுக்களை மையப்படுத்தி கீழுள்ள வினாவுக்கு விளையளிக்குக
- நீங்கள் கூறுவது தெளிவாக உள்ளது
- எனக்கு தெரிந்த மொழியில்தான் சொல்கிறேன்
- அக்காரணம் மிகவும் பெறுமதியன ஒன்று
- ஏனைய நபர்களின் ஒத்துழைப்புடன் அதை நாம் ஆரம்பிப்போம்

மேற்குறித்த கூற்றுக்களுக்குப் பொருந்தும் செவிமடுத்தல் செயற்பாட்டின் சந்தர்ப்பங்களை ஒழுங்கு முறையில் கொண்ட தொகுதியாக அமைவது

1. விளங்கிக்கொள்ளுதல், செவிமடுத்தல், மதிப்பிடுதல், எதிர்வினையாற்றுதல்
2. செவிமடுத்தல், விளங்கிக்கொள்ளுதல், எதிர்வினையாற்றுதல், மதிப்பிடுதல்
3. விளங்கிக்கொள்ளுதல், எதிர்வினையாற்றுதல், மதிப்பிடுதல், செவிமடுத்தல்
4. செவிமடுத்தல், மதிப்பிடுதல், விளங்கிக்கொள்ளுதல், எதிர்வினையாற்றுதல்
5. செவிமடுத்தல், விளங்கிக்கொள்ளுதல், மதிப்பிடுதல், எதிர்வினையாற்றுதல்

40) கருவியின் உதவியுடனான ஆளிடைத் தொடர்பாடல் முறையாக அமைவது
1. ஒலிவாங்கி
2. ஒலிபெருக்கி
3. பிரஜைகள் ஊடகம்
4. வானொலி
5. தொலைபேசி

41) இருபடிநிலைத் தொடர்பாடல் மாதிரியின் அடிப்படையில் பொதுமக்களுக்கான தகவல்களை தெரிவிப்பதில் முக்கிய வகிபங்கினையாற்றுபவர்கள்
1. ஊடகவியலாளர்கள்
2. வாயிற்காப்பாளர்கள்
3. அமுக்கக்குழுக்கள்
4. ஊடக உரிமையாளர்கள்
5. கருத்துருவாக்கத் தலைவர்கள்

42) ஆட்களிடைத் தொடர்பாடலுக்கு உரித்து அல்லாத பண்பாகக் கொள்ளத்தக்கது
1. வாய்மொழி மற்றும் வாய்மொழி சாராத அம்சங்களைக் கொண்டிருத்தல்
2. தன்னெழுச்சியாக உருவாகும் அம்சங்களைக் கொண்டிருத்தல்
3. வளர்ச்சிக்கான அம்சம் புறமொதுக்கப்பட்டிருத்தல்
4. கிளர்வூட்டல் செயன்முறையைக் கொண்டிருத்தல்
5. ஆழ்பிரிவுடன் தொடர்புடையதாய் இருத்தல்

43) பெறுநரை மையப்படுத்திய செய்தி என்பதால் கருதப்படுவது யாதெனில்
1. பெறுநருக்கு ஏற்றவகையிலான செய்தியை உருவாக்குதல்
2. பெறுநருக்கு செய்தியை முன்வைப்பதற்கு தேவையான பின்னணியை உருவாக்கல்
3. பெறுநருக்கு செய்தி வழங்கப்பட்டதன் பின்னர் அதுபற்றி விசாரித்தல்
4. செய்தி வழங்குதலில் தொடர்பாடுபவரின் அடையாளத்தை கவனத்தில் கொள்ளாமை
5. பெறுநரின் சமூக பண்பாட்டு பின்னணிகளை பற்றி கவனம் செலுத்தாமை

44) வெகுசன ஊடகங்களினால் முன்வைக்கப்படும் செய்திகள் கருத்துருவாக்கத் தலைவர்களால் மத்தியஸ்தப்படுத்தப்படுவது பற்றிய சிந்தனை
1. வாயிற்காப்பாளர் எண்ணக்கரு
2. இருபடிநிலை எண்ணக்கரு
3. சமூகப்பொறுப்புடைமைக்கோட்பாடு
4. முரன்பாட்டுக்கோட்பாடு
5. மாஸ்லோவின் தேவைக்கோட்பாடு

45) அன்றாட வாழ்விற்குத் தேவையான தகவல்கள் அடங்கிய குறிக்கபப்ட்ட காலப்பகுதியில் தொடரந்து வெளிவரும் ஒனறிணைந்து கட்டபப்ட்ட வெளியடீ என யுனஸ்கோ வரையறை செயய்ும் வெகுசன ஊடகம்.
1. பத்திரிகை
2. சஞ்சிகை
3. புத்தகம்
4. வானொலி
5. துண்டுப்பிரசுரம்

46) இலங்கையில் அண்மையில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் தமது எதிர்கால அரசியல் சார் நிலைபப்ாடுகளினை மக்களுக்கு தெரிவிக்கும் முகமாக அனைத்து ஊடகவியலாளர்களினையும் ஒருங்கே அழைத்து விளக்கமளித்திருந்தனர் இச்செயற்பாட்டினை குறித்து நிற்பது.

1. உத்தியோக பூர்வ செயதி அறிவிபபு
2. ஊடக அறிவிப்பு
3. புகைப்பட அறிவிப்பு
4. ஊடக மாநாடு
5. தேர்தல் பிரச்சாரம்

47) குறிமுறையவிழ்ப்புச் செயற்பாடொன்றினை குறிமுறையாக்கமாக மாற்றுவதற்கு ஏதுவாகும் காரணியை புலப்படுத்துவது

1. பினனூட்டல்
2. தாக்கம்
3. உச்சஸ்தானம்
4. வாயிற்காபப்ு

5. பொருட்கோடல்

48) இலங்கையில் உள்ள நாடோடி மக்கள் இலங்கையில் பண்பாட்டுப் பாரம்பரியங்களினை உள்வாங்கியுள்ளமையைக் காணக்கூடியதாயுள்ளது இது

1. பண்பாட்டுப் பரவுகையாகும்
2. பண்பாட்டு ஆரம்டுகலாகும்
3. பண்பாட்டு அதிரவாகும்
4. பண்பாட்டு தேக்கமாகும்
5. துனைப்பண்பாட்டாக்கமாகும்

49) இனங்களிற்கிடையே செயதி பரவும் விதம் பற்றியம் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் செயதி பற்றிய குறைவான அவதானம் மற்றும் யதார்த்தத்தை திரிபுபடுத்துவதற்கான போக்கு காணப்படுவதாக குறிப்பிட்ட அறிஞர்.

1. ஹேர்பட் வெல்லர்
2. சீன் மக்பிறைட்டின்
3. விலப்ர் ஷ்ராம்
4. எட்கர் ஒவ்வனஸ்
5. ஹரோல் டி. லாஸ்வெல்

50) தொடரப்பாடல் செயன்முறையில் குளோட்னொன் மற்றும் வொரன்வீவரின் வரைவிலக்கணத்தில் தலையாய அம்சமாக கருதப்பட கூடியது.

1. தகவல்
2. இடையூறு
3. குறிமுறையாக்கம்
4. பொருட்கோடல்
5. விளைவு

# அல் அஸ்ஹர் கல்லூரி– ஹெம்மாதகம

## க.பொ.த உயர் தரம் – ஐந்தாம் தவணைப் பரீட்சை 2021

## இஸ்லாம் II

புள்ளி

சுட்டெண்:...............................

நேரம்: 3 மணித்தியாலம்

பகுதி 1 இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி 11 இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

(01) தௌஹீதுக்கு எதிரான விடயங்கள் ஈமானில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

1. தௌஹீதுக்கு எதிரான அம்சங்கள் நான்கினை குறிப்பிடுக (2 புள்ளிகள்)
2. ஷிர்க்கின் வகைகள் இரண்டினையும் குறிப்பிட்டு ஒவ்வோர் உதாரணம் தருக (4 புள்ளிகள்)
3. இல்ஹாத் தோன்றுவதற்கான காரணிகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக (6 புள்ளிகள்)
4. வரலாற்றில் முனாபிக்குகளால் ஏற்பட் பாதிப்புக்களை விளக்குக (8 புள்ளிகள்)

(02) உழைப்பு முயற்சிகளில் ஈடுபடுவதை இஸ்லாம் வழியுறுத்துகின்றது

1. இஸ்லாம் அனுமதித்துள்ள உழைப்பு முயற்சி நான்கும் எவை? (2 புள்ளிகள்)
2. இஸ்லாமிய பொருளியலின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக (4 புள்ளிகள்)
3. வியாபாரத்திற்கான நிபந்தனைகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக (6 புள்ளிகள்)
4. இஸ்லாமிய கொடுக்கல் வாங்களில் தடுக்கப்பட்டுள்ள அம்சங்கள் நான்கினை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக (8 புள்ளிகள்)

(03) இஸ்லாம் ஆன்மீக மேம்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் வழங்குகின்றது

1. ஆன்மீகத்தை பாதிக்கும் அம்சங்கள் நான்கு தருக (2 புள்ளிகள்)
2. தஸவ்வுப் என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக (4 புள்ளிகள்)
3. ஆன்மீகத்திற்கு இஸ்லாம் வழங்கும் முக்கியத்துவத்தை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக (6 புள்ளிகள்)
4. ஆன்மீக விருத்தியில் சூபி தரீக்காக்களின் பங்களிப்பினை விளக்குக (8 புள்ளிகள்)

### பகுதி 11

(04) (1) இஜ்திஹாதின வாயில் மூடப்பட்டுவிட்டது என்ற சிந்தனை வளர ஏதுவான காரணிகளை விளக்குக (10 புள்ளிகள்)

(ii) தக்லீத் சிந்தனையால் ஏற்பட்ட பாதகமான விளைவுகள் பற்றி கலந்துரையாடுக
(10 புள்ளிகள்)

(05) (i) கணவனுக்கு மணைவி மீதுள்ள கடமைகள் உரிமைகளை விளக்குக
(10 புள்ளிகள்)

(ii) மனைவிக்கு கணவன் மீதுள்ள கடமைகள் உரிமைகளை விளக்குக
(10 புள்ளிகள்)

(06) (i) உடை தொடர்பான இஸ்லாத்தின் விதிமுறைகளை விளக்கருக (10 புள்ளிகள்)

(ii) வீட்டு வாழ்க்கை தொடர்பான் இஸ்லாமிய வழிகாட்டல்களை தொகுத்து முன்வைக்குக
(10 புள்ளிகள்)

(07) (i) இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்களது வாழ்க்கை வரலாற்றை குறிப்பிட்டு அவர்கள் ஹதீஸ் துறைக்கு ஆற்றிய பங்களிப்புக்களை ஆராய்க (10 புள்ளிகள்)

(ii) இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றை விளக்கு
(10 புள்ளிகள்)

(08) பின்வருன பற்றி சிறுகுறிப்பு எழுதுக

(i) அல்முஷாரகா (5 புள்ளிகள்)

(ii) அல்குர்ஆனின் அற்புதத் தன்மை (5 புள்ளிகள்)

(iii) இஸ்லாத்தில் இபாதா கோட்பாடு (5 புள்ளிகள்)

(iv) இலங்கை முஸ்லிம்கள் பொருளாதார துறைக்கு ஆற்றியுள்ள பங்களிப்புக்கள்
(5 புள்ளிகள்)

(03)

சுருக்கவிடை தருக

5. ஹுரூபுல் முகத்தஆத் என்றால் என்ன?
6. ரப்பு என்ற பதத்தின் பொருள் யாது?
7. கியாஸின் அடிப்படைகள் எவை?
8. ஹதீஸ் பிஅலி எனப்படுவது யாது?
9. ஸியாரதுல் குபூர் என்பது யாது?
10. இப்னு பதூதா இலங்கையை தரிசித்த ஆண்டு யாது?
11. இமாம் ஸுஹ்ரி அவர்கள் பிரபல்லியடைந்த துறை யாது?
12. சிங்களவர்களின் வரலாற்றைக்கூறும் நூல்கள் எவை?
13. பெரும் பாவம் செய்தோர் காபிர்கள் எனக் கூறுபவர்கள் யார்?
14. ரிபா எனும் பதம் எதனைக் குறிக்கின்றது?
15. இமாரத் என்பதன்மூலம் கருதப்படுவது யாது?
16. இலங்கை பற்றிக் குறிப்பிடும் அஜாஇபுல் ஹிந்த் எனும் நூலின் ஆசிரியர்
17. கியாஸில் அப்பரஃ என்பது யாது?
18. காதரிய்யா தரீக்காவின் இஸ்தாபகர் யார்?
19. அஷ்அரிய்யா இயக்கத்தை தோற்றுவித்தவர் யார்?
20. ஸகாத்தில் நிஸாப் எனும் பதம் எதனைக் குறிக்கின்றது
21. முஜ்தஹித் பில் மத்ஹப் என்பது யாரைக் குறித்து நிற்கின்றது?
22. வஸிய்யத் என்பதன்மூலம் கருதப்படுவது யாது?
23. பல பொருள்களுக்கு இடம்பாடான அல்குர்ஆன் வசனங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
24. அஹ்லுல் கிதாப் எனப்படுவோர் யாவர்?
25. புனைந்துரைக்கப்பட்ட ஹதீஸ்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது
26. முஹம்மத் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதம் எது?
27. இஸ்லாமிய கிலாபத் ஒழிக்கப்பட்ட ஆண்டு எது?
28. மறுமை குறிக்கும் பெயர்களுள் யம்முல் பஃஸ் என்பது?
29. மஸ்ஹபுஸ் ஸஹாபி என அழைக்கப்படும் துணை மூலாதாரம் எது?
30. பெருநாள் தொழுகை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
31. இஸ்னாத் ஸஹாபி வரை மட்டும் தொடர்ந்து செல்லும் ஹதீஸ் எவ்வாறு அழைக்கப்படுகின்றது.
32. அஸ்பாபுன் நுஸூல் என்பது யாது?
33. அர்ரிஸலா என்ற நூலின் ஆசியர் யார்?
34. இலங்கையில் எழுதப்பட்ட முதலாவது இலக்கிய நூல் எது? யாரால் எழுதப்பட்டது?